# செய்திக்கதிர்

இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

1-1-87



விலை ரூ 2/25

- திருப்புமுனைக் கட்டத்தில் ஈழப் போராட்டம்
- லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம்
- மாகாண சபைகளின் அதிகாரங்கள்
- சமயமும் இனப் பூசலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மத்தியஸ்தம் நீடிக்காது

இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு இம்மாத முடிவுக்குள் ஏற்பட்டேயாக வேண்டும் என்று நீதி ஏற்பட்டுள்ளது.

மன்னார் அடம்பனில் விடுதலைப் புலிகளினால் சிறை பிடிக்கப்பட்ட இலங்கை அரசபடையைச் சேர்ந்த இரண்டு சிப்பாய்கள் இரண்டு மாதகாலத்துக்கு மேலாக புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பிரேமதாசா ... முன்றும் தலைவரும் இந்த முயற்சியில் ஈடுபட்டார்.

சிப்பாய்களை இன்னமும் மறுத்த அரசும் நிபந்தனையாக விட்டுக் கொடுக்க விரும்பாத விடுதலைப் புலிகளும் தொழும்பின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு இந்திய இலங்கை அமைச்சர் குழு இலங்கை அரசு கூறும்

அதாவது இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி இனித் தேவையில்லையென தொனிப்பதாக அமைச்சர் அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளும் இந்தியாவின் தலையீடு எமக்குத் தேவையில்லை என்றே கூறிவருகின்றனர்.

இருதரப்பும் இந்திய மத்தியஸ்தத்தை விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.

# நேரடித் தீர்வு பற்றி லலித்தின்

இரண்டு சிப்பாய்களையும் விடுதலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

அரசபடைகளினால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தங்கள் தோழர்களில் இருவரை ஒரே சமயத்தில் விடுதலை செய்வதற்கு அரசு சம்மதித்தால் தாங்களும் இரண்டு சிப்பாய்களை விடுதலை செய்யத் தயார் என்பது புலிகளின் நிபந்தனை.

பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி புதுடில்லி திரும்பவிருந்த கடைசி நாளன்று கைதிகளைப் பரிமாறிக் கொண்டு ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

இதுகண்ட ஆச்சரியம் யாழ்ப்பாணத்துக்கு இரண்டு விடுதலைப்புலிப் போராளிகளைக் கொண்டு வந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலி தமக்குடன் நின்று இரண்டு சிப்பாய்களையும் மீட்டுக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள்.

சோவியத் தலைவர் கொர்பசேவ் இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பியபின் இலங்கை அரசின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதன் பின்னணி என்ன? வினாவின் பதில் தெரிந்தவர்கள் ...

எப்படியும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு விரைவில் கிட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

# கருத்து என்ன?

சிறிலங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் விஜய குமாரணதுங்கா மூலம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

விஜய குமாரணதுங்கா இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்டப் பொறுப்பாளர் கிட்டு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நிபந்தனையை விட்டுக் கொடுக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கவில்லை.

யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டும் இந்த முயற்சியில் ஈடுபட்டார்.

... பார்த்தோயும் மீட்டுக் கொண்டு திரும்பியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இரண்டு சிப்பாய்களையும் விடுதலை செய்ததால் நாமும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த இரு போராளிகளையும் விடுவிக்க முன் வந்துள்ளதாகச் சொல்லி ... மீண்டும் பேச்சு ... இருக்கிறார்.

அரசும் போராளிகளும் தங்கள் பிரச்சினைகளை நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையையும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி வெளியிட்டிருக்கிறார்.


வெளியீடு:
சாயிபாபா அச்சகத்தின் அச்சகமிவோர்கள்.
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22437

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கை | — ரூ | 90-00 |
| இந்தியா | — இ. ரூ | 125-00 |
| சிங்கப்பூர் | — U.S. டொலர் | 15-00 |
| மலேசியா | — U.S. டொலர் | 15-00 |
| பிறநாடுகள் | — U.S. டொலர் | 25-00 |

தொடர்புகளுக்கு:
சாயிபாபா அச்சகத்தின் அச்சகமிவோர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவு திரட்ட உலகம் சுற்றுகிறார்

## சர்வதேச நிலையைப் பொறுத்தே பிரச்சினைக்குத் தீர்வு — நெடுமாறன்

காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு நெடுமாறன் அவர்கள் பி. பி. ஸி-க்குப் பேட்டி அளித்தபோது, பி. பி. ஸி. நிருபர், "இலங்கை அரசு முன்வைத்துள்ள புதிய சமாதானத் திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டபோது, "அந்தச் சமாதான திட்டத்தை முற்றிலுமாக சகல தமிழ்க் குழுக்களும் நிராகரித்துவிட்டன. ஆகவே, அந்தச் சமாதானத் திட்டத்தில் தமிழ்க் குழுக்களுக்கு நம்பிக்கை இல்லையென்பது தெளிவாகி விட்டது" என்று திரு. நெடுமாறன் பதிலளித்திருந்தார்.

அவருடைய பேட்டியின் முழுவடிவமும் இங்கு தரப்படுகிறது.

நிருபர் கேள்வி: தங்களின் இந்த லண்டன் விஜயத்தின் முக்கிய குறிக்கோள் என்ன?

நெடுமாறன்: இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி முழுமையாக மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களின் ஆதரவை இலங்கைத் தமிழர்க்குத் திரட்டுவதற்காக பல்வேறு நாடுகளுக்கும் நான் சென்று வருகிறேன். அந்த வகையில் இங்கே பிரிட்டனுக்கும் நான் வந்துள்ளேன்.

நிரு: இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படும் காலம் நெருங்கிவிட்டதென நினைக்கிறீர்களா?

நெடு: இந்தக் கேள்விக்குத் திட்டவட்டமான விடை சொல்வது கடினம். ஏனென்றால், இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு வரவேண்டுமென்று தான் எல்லோரும் விரும்புகிறோம். அத்தகைய தீர்வு வருவதென்பது சர்வதேச நிலையையும் பொறுத்தது. மற்ற அம்சங்களையும் பொறுத்திருக்கிறது. அந்த வகையில் முன்பிருந்ததைவிட இந்தப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு வருவதற்கு பிரகாசமான காலம் இருக்கிறதுஎன நான் நினைக்கிறேன்.

நிரு: தமிழ்க் குழுக்கள் சமாதானப்பேச்சில் கலந்து கொண்டிருக்கலாமே?

நெடு: சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு அடிப்படையாக ஏதாவது ஒன்று வேண்டும். எதுவுமே இல்லாமல் மூன்றாண்டு காலமாக ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு சமரசத் திட்டத்தை ஜெயவர்த்தனா வைப்பதும் அதை ஏற்க முடியாத அளவுக்கு அவரே அதைச் செய்கிறார். இந்தக் காரணங்களினால் ஏற்க முடியவில்லை. திம்பு மகாநாட்டில் தமிழர் குழுக்கள் அத்தனையும் ஒன்றுசேர்ந்து ஒரு நாலு அடிப்படையான திட்டமொன்றைக் கொடுத்தார்கள். இந்த அடிப்படையில்தான் பேச்சு வார்த்தை நடத்த முடியுமென்று சொன்னார்கள். அந்த நாலுஅம்சங்களில் எதையுமே ஜெயவர்த்தனா ஒப்புக்கொள்ளவில்லை. அதை ஜெயவர்த்தனா ஒப்புக்கொள்கிற வகையில் எந்த சமரசப் பேச்சும் வெற்றி பெறமுடியாது.

நிரு: இந்திய அரசும் தமிழ் நாட்டு அரசும் தமிழ்க் குழுக்கள் இந்த சமாதானத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புவது மட்டுமல்ல தமிழ்க் குழுக்களுக்கு நெருக்கடியையும் கொடுத்து வருகின்றனவே. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நெடு: இந்தியஅரசும் தமிழக அரசும் இந்தப் பிரச்சனையை எப்படிப் பார்க்கிறார்கள் என்று சொன்னால் இலங்கைத் தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்கள்? எதற்காகப் போராடுகிறார்கள்? முப்பதாண்டு காலமாக அவர்களது போராட்டத்தின் தன்மை என்ன என்பதை உணர்ந்து பார்க்காமல், இலங்கைத் தமிழர் பிரச்சனையினால் இந்தியாவிலுள்ள தமிழகத்தில் எந்தப் பிரச்சனையும் வந்து விடக்கூடாது அதைத் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால், இந்தப் பிரச்சனையை எப்படியாவது அரைகுறையாகவாவது சமரசத்தீர்வுவை ஏற்படுத்தி இந்தப்பிரச்சினையைமுடித்துவிடவேண்டும் என அவசரப்படுகிறார்கள். அதுதான் உண்மை. இலங்கைத் தமிழர்க்கு ஒரு நிரந்தரமான தீர்வு வரும்வகையில் இந்தப் பிரச்சினையை முடிக்கவேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுகளுக்கு வந்தால்ஒழிய, இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வராது.

நிரு: தமிழ்க் குழுக்களுக்கு தமிழ் நாட்டு மக்களிடையே கூட ஆதரவு குன்றிவருவதாக கூறப்படுகிறது. அண்மையில் தமிழ்க் குழுக்களின் செய்தித் தொடர்புக் கருவிகள் கைப்பற்றப்பட்டபோது கூட தமிழ் நாட்டு மக்கள் ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கவில்லையே?

நெடு: அப்படிச் சொல்வது தவறு. ஏனென்று சொன்னால் தமிழ்க் குழுக்களிடம் ஆயுதங்களைப்

(17-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் இனப் பூசலும்

"சமயங்கள் மனித இனங்களிடையே சமாதான சகவாழ்வையும் நல்லுணர்வையும் வளர்ப்பதற்குப் பதிலாக, வேற்றுமைகளையும் பூசல்களையும் போர்களையும் தோற்றுவிக்கின்றனவா? சிலுவைப் போர்களின்போது பல நூற்றாண்டுகளாக பிறைக்கும் சிலுவைக்குமிடையே மோதல் நிகழ்ந்தது. மதப்போர்களால் ஐரோப்பா தவித்தது. மூன்று நூற்றாண்டுகள் கிறிஸ்தவ மதம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து, மனிதரை மந்தைகளாக்கித் தாக்கிற்று. [illegible] ஒன்றிணைந்து போர்ப் பிரசாரம் செய்தது. தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பௌத்த மறுமலர்ச்சி ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தற்போது இனப்பூசல்களை வளர்க்கப் பயன்படுகிறது. அரசியல் வாதிகள் அதனைத் தமக்கு வாய்ப்பான கருவியாகக் கொண்டு தமது குறிக்கோளைச் சாதிக்கின்றனர். மதகுருமார் அவர்களுக்கு உறுதுணையாக நிற்கின்றனர். அவர்கள் வெவ்வேறு பெயரில் குழுக்களை அமைத்துக்கொண்டு இனவெறிச் செயல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தூண்டுகின்றனர். இதைத் தேரவாத பௌத்த நாடுகளில் நன்கு அவதானிக்கலாம்."

கனடா நாட்டு மக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் இறையியல் பீடத்துடன் இணைந்த ஒப்பியல் மதங்கள், மதங்களின் வரலாறு என்னும் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றும் பீற்றர் ஷால்க் சமீபத்தில் யாழ். பல்கலைக் கழகத்தில் உரையாற்ற, கலாநிதி சிவத்தம்பியின் அழைப்பை ஏற்று வந்திருந்தார். பல்கலைக்கழகம் மாணவர் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்தபடியால் அவரது விரிவுரை வளாகத்தின் அருகில் யாழ்ப்பாணக் கல்லூரியின் நிர்வாகத்தில் இயங்கி வரும் [illegible]ஸன் இரத்தினம் நிலையத்தில் நிகழ்ந்தது. வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கலாநிதி பத்மநாதன் தலைமை தாங்கினார். அப்பொழுது பேராசிரியர் ஷால்க் கூறிய ஆரம்ப உரையின் சாரம் இதோ தரப்பட்டுள்ளது.

இலங்கையில் பௌத்த பொதுஜன இயக்கங்கள் (Lay Movements) என்ற தலைப்பில் அவரது பேச்சு மிக நீண்டது. தாம் ஸ்வீடன் மொழியில் ஒன்றில் எழுதிய 'இலங்கையில் அரசியல் பௌத்தம்' என்ற கட்டுரையையும் சுட்டிக்காட்டினார்.

அரசியல் பௌத்த இயக்கங்களுக்கு அரசாங்கம் எங்கிருந்து இத்தகைய சக்திவாய்ந்த மின்னோட்டத்தை வெளிக் கொணர்கிறார்கள்? இவ்வியக்கங்களுக்குப் பின்னால் நின்று பணமும் நேரமும் செலவிடும் சக்திகள் எவை என்ற விடயங்களை மிகவும் ஆழமாகப் பார்த்துள்ளார்.

சிங்களத்தில் மட்டும் வெளியிடுகின்ற இவ்வியக்கங்களின் விபரங்களைத் திரட்டி ஐரோப்பிய மொழிகளில் உலகறியச் செய்து வருகிறார். ஆங்கிலம், ஸ்வீடிஷ், ஜேர்மன் மொழிகளிலும் இவரது கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

அவர் சுட்டிக்காட்டும் நிறுவனங்களில் 'பௌத்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் சமாஜம்' 1979-ல்

## பீற்றர் ஷால்க்குடன் சிறிது நேரம்

ஆரம்பமாகியது. இந்தியாவில் இலங்கையின் ஸ்தானிகராயிருந்த சிறிபெரேரா இதன் தலைவர். சமயமும் இனமும் பிரிக்கமுடியாதவை. சிங்கள இனம் அழியாதிருக்க வேண்டுமானால் பௌத்தரும் உடன் வாழவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலான [illegible] உடையவர். எழுபத்தைந்து நிறுவனங்களை ஒன்றிணைத்துள்ளார். இந்த சமாஜத்தில், இச்சமாஜம் வெளியிட்ட 1983 ஆடி இனக்கலவரத்துக்குப் பின் வெளிவந்த "தமிழ்ப் பிரச்சினை பற்றிய நிதர்சனமான உண்மைகள்" என்ற நூல் முக்கியமானது. அதிலுள்ள மூலக்கருத்துகள் இதற்கு முன்னரே "ஐலண்ட்" பத்திரிகையில் (ஒக்டோபர் 8, 1982) 25 கோரிக்கைகளாக முன்வைக்கப்பட்டன. ஷால்க் மேலும் சொன்னார்:

பௌத்த நிறுவனங்களுள் மற்றொரு பலம் வாய்ந்த அமைப்பு சமஸ்த லங்கா பௌத்த நிறுவனக் கூட்டமைப்பு. 1981 இல் ஆரம்பிக்கப்பட்ட இது ஓராண்டு ரகசியமாகச் செயற்பட்டபின் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் போஷகர் சிறில் மத்தியூ எம். பி. — எட்மண்ட் [illegible] இதன் அதிமுக்கிய இயக்குநர். பௌத்த வங்கி, சிங்கள வங்கி அமைக்க வேண்டும்; பிற மத இன வர்த்தகரைத் தென் இலங்கையில் தொழில் செய்ய விடக்கூடாது; இப்படியான பொருளாதார அரசியல் நடவடிக்கைகளால் பௌத்த சிங்கள இனத்தின் பலத்தை வளர்க்கவேண்டும் என்பது அவர்களது கோரிக்கை. என். ஆ. ஜயவர்த்தன (முன்னைநாள் மத்திய வங்கி கவர்னர்) இதன் தலைமைப் பணி ஆற்றுகிறார். பெரிய தொழிலதிபர்கள் தம் சமூகத்திற்காகச் சிறுபான்மை இனத்தவரைப் பொருளாதாரத் துறையிலிருந்து அகற்றி விட விரும்புகின்றனர். அதற்குச் சமயத்தை முகமூடியாக உபயோகிக்கின்றனர்.

[illegible] மண்டலய என்ற நிறுவனத்தில் 72 அமைப்புகள் சேர்ந்துள்ளன. உலக மதுவிலக்கு இயக்கத்துடன் தொடர்புகொண்டு அதன் நிதியுதவியுடன் இங்கு மதுவிலக்குப் பிரசாரம் செய்வதுடன், அவ்வாறு கிடைக்கும் நிதியைத் தமது இனவெறுப்புக் கருத்துகளைப் பரப்பவும் உபயோகிக்கின்றன. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்காந்திநேவிய நாடுகளின் நல்லொழுக்க வாலிப சங்க நிர்வாகிகளுக்கு இந் நிறுவனத்தின் அரசியற் போக்குப் பற்றி எச்சரிக்கை செய்ய வேண்டியது அவசியமாயிற்று.

'சிங்கள பலவேகய' என்ற இயக்கம் 1982-ல் ஆரம்பித்தது. இதன் ஸ்தாபகர் இப்பொழுது லண்டனில் இருக்கிறார். பாரிஸ், நியூ யோர்க் போன்ற பெரிய நகரங்களில் சிங்கள பௌத்த தீவிரவாதக் கருத்துகளைப் பரப்பவும் இயக்கங்களைத் தொடங்கியுள்ளார். இதில் முக்கியஸ்தரான சோபித தேரர் மது விலக்கு இயக்கத்திலும் ஈடுபட்டுள்ளார்.

பிரான்ஸில் குடியேறியுள்ள கறுப்பர்களை எதிர்க்க ஒருநிறுவனம் இருப்பது போலச் சிங்களவரிடையில் இயங்கி வருவது ஜாதிக பெரமுன. 1985-ல் இச்சபை தனது பெயரை மாற்றித் ''தேசிய முன்னணி'' என இயங்கி வருகிறது. ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியினர் பலர் இதில் உள்ளனர். கிராமங்கள் தோறும் இவற்றின் கிளைகள் குருமார் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலந்தோறும் குருமாரின் அரசியல் வலு கூடியும் குறைந்தும் வந்துள்ளது. இப்போதும் கூடிவருகின்ற அலை பெருக்குக் காலம் எனத் தோன்றுகிறது. இம் முன்னணிக்கு அஸ்கிரிய மகாநாயக தேரரின் பூரண ஆதரவு உண்டு. மாகாண சபைகளுக்குப் பதிலாக உப-அரசுக் கவுன்சில்கள் (Sub-State Councils) என்ற கீழ்மட்ட அரசியலதிகாரப் பரவலாக்கத்தை மட்டுமே அனுமதிக்க முடியும்; மாகாண மட்டத்திலோ, மொழிவாரிப் பிரதேச மட்டத்திலோ அரசியற் பரவலாக்கம் தற்கொலைக்கு ஒப்பானது எனச் சிங்களவரைத் தூண்டுகின்றது. பஞ்ஞாசீக தேரர் தமது தீவிர தமிழ் எதிர்ப்புக் கட்டுரைகளை ஒன்றுதிரட்டி ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளார்; வெளி நாடுகளில் விளங்க அழகிய தாளில் அச்சிடப்பட்ட இந்நூலைத் தமிழ் அரசியல்வாதிகள் படிக்க வேண்டும். அதன் தலைப்பு: '' Ethnic Crisis — The Facts.''

# சுவிற்சலாந்தில் தமிழீழ மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சுவிற்சலாந்துவாழ் தமிழீழமக்கள் கடந்த 29-11-86 சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கோஷங்களும், சுலோக அட்டைகளும் இடம்பெற்றன.

நவம்பர் மாதத்தில் தென்னிந்தியாவில் தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் விடுதலைப்புலிகளின் தோழர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். விடுதலைப் போராட்டத்திற்காக அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களும் தகவல் சாதனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தத் தகவல்களை கேள்வியுற்ற சுவிஸ்வாழ் தமிழீழ மக்கள் பெரும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் கொண்டிருந்தனர். கூடவே அகில உலக அரசியல் வானில் நம்பிக்கை நட்சத்திரம் அன்னை இந்திராவின் தவப்புதல்வரு அன்றி பாரதத்தேசமா இப்படிச் செய்தது என்று பதை பதைத்துப் போயினர்.

இடி நடவடிக்கையை எதிர்த்து சுவிஸ்வாழ் தமிழீழமக்களின் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சுவிஸ் நாட்டின் தலைநகரான போர்ண் மாநகரில் உள்ள கெல்வெட்டியா பிளட்ஸ் சந்தியில் இருந்து ஆரம்பித்து பேர்ண்மாநகரில் உள்ள இந்திய தூதரகம்வரை சென்று இந்திய உயர் ஸ்தானிகரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் நிறைவு பெற்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

சிறிபெரேரா ஐக்கிய தேசியக் கட்சியின் வலது சாரிக் குழுவில் மிகுந்த செல்வாக்கு உள்ளவர். ஜே. ஆர். 'நம்மட ஆள்' அல்லர் என்று வெளிப்படையாகப் பேசுபவர் பழைய சேனநாயக குடும்பவழியில் ஐ.தே.க செல்லவேண்டும் எனக் கருதுபவர்.

ஒரு புறம் பௌத்த குருமாரும், ஸ்ரீலங்கா சு. கட்சியும் இனவேற்றுமையை வளர்த்துத் தம் மக்கள்ஆதரவைப் பெற முயலும் அதே வேளையில், ஐ. தே. கட்சி ஒருபுறம் சிங்கள தீவிரவாதிகளையும் மறுபுறம் தமிழ்த் தீவிரவாதிகளையும் திருப்திப்படுத்த முயல்கிறது. இரண்டு இழுப்பு விசைகளின் மத்தியில் கயிற்றுநடை பயிலும் சேர்க்கஸ்வித்தைக்காரன் போல நடிக்கிறது. என்று தடம்புரளுமோ தெரியாது. மலையக மக்களுக்கு வாக்குரிமைகொடுத்து அவர்களது ஆதரவைப் பெற முயல்கிறது. ஸ்ரீல. சு. கட்சி இதையே அதற்கு எதிராகத் திருப்பிவிட முயல்கிறது. தனியே சிறுபான்மையினரது ஆதரவின்றி இதுவும் ஆள முடியாது. எனவே ஒரு இராணுவ சர்வாதிகாரம் ஏற்படலாம். அரசு சகல மக்களுக்கும் நலம் புரியும் ஓர் ஆட்சிமுறையையோ, தனி பௌத்த சிங்கள ஆட்சி முறையையோ நாட்டில் திணிக்க ஓர் சர்வாதிகாரியால் தான் முடியும் என்ற கருத்துக்குத் தள்ளப்படும்போது தற்பொழுதுள்ள ஜனநாயகமுகப்பும் (Facade) உடைந்து விழலாம். இவ்வெச்சரிக்கையை மனத்துள்கொண்டு தமிழ் அரசியல் வாதிகள் தமது குறிக்கோள்களை வற்புறுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம்

* விக்டர் *

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் உலக நாடுகளைக் கொள்ளையடித்துத் தனது தாய்நாட்டிற்குத் திருப்பி வளம்பெருக்கியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். அதேபோல, பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க பூதமும் தனது சுரண்டல் பசியைத் தீர்த்துக்கொள்ள பிறநாடுகளைக் கொள்ளையடிக்கத் துவங்கியது. இருபதாம் நூற்றாண்டில் வெகு வேகமாக 'சுதந்திரமாக' சுரண்டி, நவகாலனிய ரீதியில் கொள்ளையடித்து பெரும் வல்லரசாக வளர்ந்துவிட்டது. இப்பூதம் பெருத்து வளர்வதற்கு அடிப்படையாக இருந்தது லத்தீன் அமெரிக்க நாடுகளாகும்.

மெக்சிகோ, கொஸ்டாரிக்கா, ஹொண்டூராஸ், குவாதமாலா, நிக்கராகுவா, பனாமா, எல்சல்வடோர் போன்ற மத்திய அமெரிக்க நாடுகளையும், ஆர்ஜென்டீனா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, ஈக்வடோர், பராகுவே, பெரு, உருகுவே, வெனிசூலா போன்ற தென் அமெரிக்க நாடுகளையும், ஜமைக்கா கிரெனடா போன்ற சின்னஞ்சிறு நாடுகளைக்கொண்ட கரீபியன் பிரதேசங்களும் தான் அமெரிக்க பூதம் வளம் பெறுவதற்கு இனிமையாக அமைந்தன. அமெரிக்க பூதத்தின் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்திற்கு இலக்காக விளங்கின. இன்றும் இந்த லத்தீன் அமெரிக்க நாடுகளையும் கரீபியன் நாடுகளையும் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும், ஆட்டிப் படைக்கும் பெரும் பூதமாக அமெரிக்கா இருந்து வருகிறது.

**இரண்டாம் உலகப்போருக்குப் பின்:**

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தனது காலனிய சுரண்டலை அமெரிக்கா துவங்கிவிட்டாலும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்பே அது வெகு வேகமாக பெருத்த எல்லை சாத தன்மை நிரூபித்துக்கொண்டது. லத்தீன் அமெரிக்க நாடுகளில், போட்டியாக இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் போட்டியில் வீழ்த்திவிட்டு தனது ஆதிக்கத்தை மேலும் வலுவாக்கியது. முதல் உலகப் போரின்போது இருந்த அமெரிக்க முதலீடு என்பது 500 சதவீதத்துக்கும் மேலாக இக்கால கட்டத்தில் உயர்ந்தது.

இன்றுவரை இது தொடர்கிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் மூலதனமிடுவதை அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக அமெரிக்கா காண்கிறது. இன்று பின்தங்கிய மூன்றாம் உலகநாடுகளில் அது அளித்துள்ள முதலீட்டில் 80 சதவீதம் லத்தீன் அமெரிக்க நாடுகளில் தான் உள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏற்றுமதியில் 70 சதவீதம் பன்னாட்டு கார்ப்பரேசன்களின் வட அமெரிக்க கார்ப்பரேசன்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

மேலும், அமெரிக்காவுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகள் என்பது தனது ஏகபோகங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பதற்கான சந்தை நாடுகளாக உள்ளன. கூடவே தனது ஏகபோகங்களின் உற்பத்திக்கு மலிவான குறைந்த விலையில் மூலப்பொருள்களை வாங்குவதற்காக மூலதாரமாக இந்நாடுகள் உள்ளன.

இவ்வாறு பொருளாதார ஆதிக்கத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீது திணித்த அமெரிக்கா அந்நாடுகளின் பொருளாதாரத்தையும் வர்த்தகத்தையும் தன் ஏகாதிபத்திய நலன்களுக்கேற்பச் சிதைத்துப் பலனடைந்து வருகிறது. அதாவது, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒரே பயிரைப் பயிர்செய்யும் ஒரு கண்டிப்பான முறை திணிக்கப்பட்டது. ஆம்! அவை ஒன்று அல்லது ஒரு சில மூலப்பொருட்களை மட்டுமே, ஏற்றுமதிக்காகவே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. இந்த முறையில் ஒவ்வொரு லத்தீன் அமெரிக்க நாடும் அமெரிக்காவிற்கு ஒரு பழத் தோட்டமாக, காப்பித்தோட்டமாக, அல்லது கரும்புத்தோட்டமாக அல்லது சுரங்கமாக, வயலாக மாறியது. இது லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுயமான தொழில் வளர்ச்சியை பாதிப்படையச் செய்துவிட்டது. உள்நாட்டு மக்களின் தேவைகள் அலட்சியப் புறக்கணிக்கப்பட்டு ஏகாதிபத்திய ஏற்றுமதிக்கு ஏற்ப பொருளாதாரம் திணிக்கப்பட்டது.

**கொள்ளை லாபமும், கடன் சுமையும்:**

இந்நாடுகளில் அமெரிக்காவின் ஏகபோக உற்பத்திக்கு ஏற்ப மூலப் பொருட்கள் மலிவாக கிடைத்து விடுவதால் உற்பத்தியில் கூடுதல் செலவுகள் இல்லாமல் இருக்க, மறுபடியும் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த கூலியே கொடுப்பதால் அமெரிக்கா கொள்ளை லாபத்தை அடைகிறது. கணிசமற்ற கட்டுப்பாடற்ற சுரண்டல் மூலம் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 73,000 கோடி ரூபாய் வரை லாபமாக எடுத்துச் செல்கிறது. லாப விகிதம் என்பது இங்கு உச்சத்தில் இருக்கிறது. அமெரிக்க ஏகபோகங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து மூலதனமிட்டு ஒவ்வொரு டாலருக்கும் 400 முதல் 500 சதவீதம் வரை லாபமாகப் பெறுகின்றன. இது லத்தீன் அமெரிக்க மக்கள் ஒவ்வொரு கடுமையான சுரண்டல் ஒடுக்கு

முறைக்கு ஆளாகியுள்ளனர் என்பதைக் காட்டிவிடுகிறது.

சுரண்டல் ஒடுக்கு முறையுடன் கூடவே இன்னொரு விதத்திலும் லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கொள்ளையடிக்கிறது. நாடுகளின் பின்தங்கிய நிலைமையையே தனக்கு சாதகமாக பயன்படுத்தி உதவி செய்வது போல் கடன்கொடுத்து மீள முடியாத கட்டுப்பாட்டுக்குள் சிக்க வைத்து விடுகிறது. போதாக் குறைக்கு கடனுக்கான வட்டி என்று சொல்லி மூட்டை மூட்டையாக அடித்துச் செல்கிறது.

1960 முதல் 85 வரை மட்டும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் அந்நியக் கடன் சுமை 70 மடங்கு அதிகரித்துள்ளது. கிட்டத்தட்ட 8,88,000 கோடி ரூபாய் வரை இந்நாடுகளின் கடன் சுமை உள்ளது. வட்டியாக ஆண்டு தோறும் அமெரிக்கா கோடிக் கணக்கில் சுருட்டுகிறது. இந்நாடுகள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் வட்டியாகவே கொடுத்து தங்களது செல்வத்தை ஏகாதிபத்தியத்திடம் இழந்து வருகின்றன. 1984-ல் இந்நாடுகள் வட்டியாக மட்டும் 96,000 கோடி ரூபாயை அமெரிக்காவிடம் இழந்தன. அமெரிக்காவின் கடன் கொள்ளை இந்நாடுகளின் பொருளாதாரத்தின் குரல்வளையையே நெரித்துவிடும் அளவு உள்ளது.

1982-ல் மட்டும் பிரேசில் 31,200 கோடி ரூபாய் புதிய கடனாக வாங்கியது. ஆனால், அதே ஆண்டு அது ஏற்கனவே வாங்கிய கடன்களுக்கான வட்டியாக 4,56,000 கோடி ரூபாய் அமெரிக்காவிற்குக் கொடுத்தது. எப்படியிருக்கிறது பாருங்கள்! இப்படிக் கடன் கொடுத்துக் கொள்ளை வட்டி வாங்கி அந்நாடுகளை மீளமுடியாத சூழலில் சிக்க வைத்துவிட்டு லாப வெறியாட்டம் போடுகிறது அமெரிக்கா.

### மக்களின் அவலநிலை

அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் சீர்குலைக்கப்பட்ட இந்நாடுகளில் வாழும் மக்களின் நிலைமையைப் பற்றி கேட்க வேண்டியதில்லை. சுமார் 35 கோடிக்கும் மேற்பட்ட லத்தீன் அமெரிக்கர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் நகரங்களிலேயே வசிக்கின்றனர். அமெரிக்கா ஏகபோகங்களின் ஆதிக்கம், கடுமையான சுரண்டல், நாளும் உயரே பறக்கும் விலைவாசி இவர்களை வாட்டி வதைக்கிறது.

கிராமப் புறங்களின் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை. லத்தீஃ பண்டியா எனக் கூறப்படும் பெரும் நிலப் பிரபுத்துவப் பண்ணைகளே அங்கு நில உடைமை முறையின் அடிப்படை. பயன்படுத்தப்படும் நிலத்தில் 60 சதவீதமான நிலப்பகுதி, மக்கட் தொகையில் ஒரு சதவீதத்தினரான சிறுபான்மை நிலப்பிரபுக்களிடம் குவிந்துள்ளது. விவசாய உற்பத்தித் திறன் குறைவாக இருப்பது ஒரு புறமிருக்க, மறுபுறம் நவீன சுரண்டல் யுக்திகளுடன் அமெரிக்க கார்பபரேசன்கள் லத்தீன் அமெரிக்காவின் பண்ணைத் தொழில்களில் ஊடுருவியுள்ளன. இதனால் மேலும் மேலும் விவசாய உற்பத்தி என்பது அமெரிக்காவின் பன்னாட்டு கார்ப்பரேசன்களைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பண்ணைத் தொழிலில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது நாளும் பெருகிவரும் ஒன்றாக உள்ளது. விவசாய உற்பத்திகூட அமெரிக்க சார்பு உற்பத்தியாக இருப்பதால் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்த நிலையிலிருந்து அவற்றை இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

மேலும், லத்தீன் அமெரிக்க மக்களில் கால்வாசிப்பேர் படிப்பறிவு அற்றவர்களாக உள்ளனர். பிறக்கும் பாதிக்கு மேற்பட்ட குழந்தைகள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்ல முடியாத கொடிய வறுமையான குடும்ப சூழலே நிலவுகிறது. போதிய உணவின்றி 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஊட்டச் சத்துக் குறைவினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பிறக்கும் குழந்தைகளில் ஐந்தில் ஒரு பகுதி குழந்தைகள் உயிர் பிழைத்து வாழ்வதில்லை. கடுமையான விலையேற்றம் என்பது அனைத்து தரப்பு மக்களையும் கடுமையாக பாதித்துள்ளது. நாளும் மக்களின் வாழ்க்கைத் தரம் கீழே தள்ளப்பட்டு ஒட்டாண்டிகளாக்கப் படுகின்றனர்.

இவ்வாறு உள்நாட்டு நிலப்பிரபுக்களும், பெருமுதலாளிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியமுமே, லத்தின் அமெரிக்க மக்களின் துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றன. இதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பங்கு பிரதானமாக உள்ளது.

### அரசியல் ராணுவ ஆதிக்கம்

இவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது பொருளாதார மேலாதிக்கத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளின்மேல் செலுத்தி வரும் போதே அரசியல், ராணுவ மேலாதிக்கமும் செலுத்தி வருகிறது. 2-ம் உலகப் போருக்குப் பின் உலகெங்கும் வெடித்தெழுந்த தேச விடுதலைப் போராட்டங்கள் லத்தீன் அமெரிக்காவிலும் தீவிரமடைந்தது. எனவே லத்தீன் அமெரிக்க நாடுகளை நேரடியான காலனிகளாக வைத்து தனது மேலாதிக்கத்தை நிறுவ இயலாவிட்டாலும் பல்வேறு நவீன யுக்திகளைக் கையாண்டு தனது அரசியல், ராணுவ ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது.

நேரடியாக போர்க் கப்பல்களை அனுப்பி மிரட்டுவது, தனது கைப்பொம்மைகளின் ஆட்சியை நிறுவுவது உள்நாட்டு பிற்போக்குக் கட்சிகளைத் தன் வசமாக்கிக் கொள்வதுதனக்கு எதிரானமுதலாளித்துவ ஜனநாயக எதிர்க்கட்சி அரசாங்கமாக இருந்தால் கூட அதற்கு எதிராக சதி, சிர்குலைவு வேலைகளில் ஈடுபடுவது ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புகளுக்குத் தூண்டி விடுவது கூலிப் படைகளை அனுப்புவது தேவையென்றால் பகிரங்கமாகவே ஆயுதந் தாங்கி தலையிடுவது என்று பல்வேறு நவீன யுக்திகளைக் கையாண்டு லத்தீன் அமெரிக்க நாடுகளின் மீதான தனது அரசியல் ராணுவ ஆதிக்கத்தை இன்றும் செய்துவருகிறது.

இதில் குறிப்பாக ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் பாசிச ராணுவ கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்ற வைத்து

(14-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புமுனைக் கட்டத்தில் ஈழப் போராட்டம்

'பயங்கரவாதத்தை' ஒழித்தல் என்ற போர்வையில் சிறீலங்கா அரசிற்கு வழங்கப்பட்டிருக்கும் அமெரிக்க இராணுவ உதவியானது போராளிகளுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்பது நிச்சயமானது. இது இனப்பிரச்சினைக்கான இணக்கத் தீர்வு காணும் சூழ்நிலையைப் பாதிக்கும் என வெளிப்படையாகவே இந்தியா தெரிவித்துள்ளது. இருந்தும் பல்வேறு நிபுணத்துவ உதவிகளும், ஆலோசனைகளும், பயிற்சிகளும், ஆயுதங்களும் பல்வேறு வழிகளில் சிறிலங்கா பெற்றுக் கொள்ள அமெரிக்கச் செல்வாக்கே மூலகாரணம் என்பது ஒன்றும் மறைபொருளல்ல.

திருமலையை மையமிட்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், இருநூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள விமானத்தளம், இன்னும் பிற பன்னாட்டு நிறுவனங்களும், தமது செயற்பாடுகளை விரித்துச் செல்வதும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவேயாகும். சிங்கள மக்களை குடியமர்த்தி மலிவான விலையில் உழைப்பைச் சுரண்டவும், தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகள் எனக் கூறி விரட்டி அடிக்கும். இவற்றினூடாக திருமலைத் துறைமுகப் பகுதியானது தமது செல்வாக்கு மண்டலத்துள் கொண்டுவர அமெரிக்கா முயல்கிறது. இந்த வகையில்தான் 'சோலர் ஏனெர்ஜி கொப்பொரேசன்' என்னும் அமெரிக்க நிறுவனம் திருமலைக் கடலில் இருந்து மின்சாரம் பிறப்பித்தல் எனக்கூறி முகாமிட முயற்சி எடுத்துள்ளது. இவ்வகையில் தான் திருமலையில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகவும் அவற்றிற்கான மின் விநியோகத்தைத் துண்டிக்கவும் எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

> விடுதலை அமைப்புக்கள் தமக்கிடையே ஐக்கியத்தை வலியுறுத்தத் தவறி மோதும் சூழ்நிலை ஏற்படுவது கண்டிக்கத்தக்கது. போர்க்குணம் கொண்ட மக்களை வேலைத் திட்டத்தினூடாக ஒன்று திரட்டி எதிரிக்கெதிராக உக்கிரமான போராட்டம் ஒன்றை நடாத்திச் செல்ல வேண்டியதே அவசியமாகும்.

> திருமலையை மையமிட்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், இருநூறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள விமானத்தளம், இன்னும் பன்னாட்டு நிறுவனங்களும், தமது செயற்பாடுகளை விரித்துச் செல்வதும் அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவேயாகும்.

இவ்வாறு அமெரிக்கா இலங்கைக்குள் செல்வாக்குச் செலுத்தி வரும் அதே வேளையில் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் திரு. கஸ்பார் வெயின்பேர்க்கர் அக்டோபரில் புதுடில்லி விஜயம் மேற்கொண்டிருந்தார். அமெரிக்காவுடன் எந்தவித பாதுகாப்பு உடன்பாடும் செய்யத் தயாராக இந்தியா இல்லை என்பதை இந்தியா வற்புறுத்திக் கூறியிருக்கும் அதேசமயம் விசேட கம்பியூட்டர் இயந்திரம், F404 யுத்த விமானங்களுக்கான இயந்திரத் தொழில் நுட்பம், என்பன போன்றவற்றை இந்தியா பெறவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் - இந்திய உறவின் காண் காடு நிலையானர் பாதகமற்றதை யாற்ற அமெரிக்க முனைகிறது. இந்தியாவின் அண்மைய சரித்திரத்திலேயே அமெரிக்க பாதுகாப்பு செயலர் புதுடில்லி சென்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இத்தகைய சூழலை ஒப்புப் பார்க்கும்போது சர்வதேச அரசியல் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படுவதை அவதானிக்க முடியும். இந்துமாகடல் பிராந்தியத்தில்

> புதிது புதிதாய் முளைவிட்ட எத்தனையோ அமைப்புக்கள் காலஓட்டத்துடன் நீடிக்க முடியாமல் உதிர்ந்து போனமை கண்கூடாகும். இதை விடுத்து விடுதலை அமைப்புக்கள் ஒன்றை ஒன்று அழிக்க முனைவது கண்டனத்துக்குரியது. அதே போல் ஒரேயொரு இயக்கம் அது மட்டும் இருந்தாலே போதும் என நினைப்பது ஒருமனிதன் தனக்கு ஒரு கண் மட்டும் போதும் என நினைத்து மற்றையதை அழிக்க நினைப்பதற்கு ஒப்பான செயலாகும்.

(13-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைகளின் அதிகா
# இவை திருப்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அ
வடக்கிலும் கிழக்கிலும் இரண்டு மாகாண
சபைகள் என்று யோசனைகள், அதற்
விளக்கங்கள் என்று இன்னமும் ஒரு மு
களின் அதிகாரங்கள் என்ன? இவைபற்ற

இந்திய அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்காவின் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு ஆகிய முத்தரப்பு முயற்சி விடுதலை இயக்கங்களின் அறிவிப்பைச் சமாளிக்கும் நடவடிக்கையே என்பது புலனாகும்.

கடந்த காலப் படிப்பினைகளைக் கவனத்தில் கொண்டால் மாகாண கவுன்சில் சமரசத் தீர்வு தமிழர் பிரச்சினைக்குரிய சரியான தீர்வாகாது என்பது தெளிவாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஜெயவர்த்தன அரசும் 'பேச்சு வார்த்தைகள்' நடத்தி சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் தற்போது பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. அவற்றின் முக்கியமான பகுதிகளை தகவலுக்காகவே தருகின்றோம்.

அதிகாரப் பரவலாக்கம்: Decentralization of Power) என்ற முறையில் பேச்சு வார்த்தைகள் தொடங்கி, தற்போது ஜெயவர்த்தனவால் 'அதிகாரப் பகிர்வு' (Devolution of Power) என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு பிரேரணையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஸ்ரீலங்கா அரசுக்குமிடையே நடந்த இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் 'வடக்கு கிழக்கு' மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமென்ற கூட்டணியின் மிக முக்கியமான கோரிக்கை நிராகரிக்கப் பட்டுள்ளது. தமிழ் பகுதிகளில் மாகாண சபைக்கான மிகக்குறைந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்த இருபகுதி இணைப்பு அவசியமாகும்.

எல்லைகளை நிர்ணயிக்கும் குழுவின் பெறு பேறு, மாகாணங்களுக்கிடையேயான பரஸ்பர ஒத்துழைப்பு, மிகுதியான விடயங்கள், மாகாண ரீதியானதும் அமைப்பொத்ததுமான பிரச்சினைகள், சட்டம், ஒழுங்கு, மாகாண சபையின் சட்டவரையறை, அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம், மாகாண கல்வி அதிகார சபையின் அதிகாரங்களும் செயல்பாடுகளும், நிலம் நிலத்தீர்வை ஆகிய விஷயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எல்லைகளை நிர்ணயிக்கும் குழுவின் பெறுபேறு: ஸ்ரீலங்கா அரசினால் நியமிக்கப்பெறும் இக்குழு மாகாணசபை அமைக்கப்பட்டு 18 மாதங்கள் ஆனபின் சமர்ப்பிக்கப்படும் முடிவுகளுக்குப் பின்னரே மாகாண எல்லை வரையறுப்புகள் முழுமைபெறும். மிகுதியான விஷயங்கள்: (மாகாண சபைக்கான அதிகாரப் பட்டியலில் சேராதவை) எல்லா விவகாரங்களுக்கும் செயல்பாட்டுக்குமான தேசியக் கொள்கைகளையும், பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு புலனாய்வு (மாகாணப் பட்டியலில் உள்ளவை தவிர்ந்த) அணு சக்தி அணு சக்தி சார்ந்த கனிப்பொருள் வளத்தின் உற்பத்தி, வெளிநாட்டு விவகாரம், அஞ்சல் தொலைத்தொடர்பு வானொ, தொலைக்காட்சி நிறுவனங்கள் உயர் நீதிமன்றங்களுக்கான அமைப்பு விதிமுறைகள் தேசிய வரித்தொடர்பான நிதி, நீதிபரிபாலனக் கொள்கை, வெளிமூல வளங்களுக்கான சுங்கவரி, விமான நிலையம், விமான போக்குவரத்து, இரயில்வே, தேசியப்போக்குவரத்து, கப்பல், கப்பல்போக்குவரத்து ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாணசபை, உள்நாட்டு அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுக்கான தேர்தல்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பாராளுமன்றச் சட்டத்தின்மூலம் தேசிய முக்கியத்துவம் கருதி நிறுவப்பட்ட நிறுவனங்கள் அத்துடன் இத்தகை உயர்கல்வி, ஆராய்ச்சி விஞ்ஞானத்தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு இடையிலான தராதரத்தை நிர்ணயம் செய்தல் ஆகிய இவை அனைத்தும் ஸ்ரீலங்கா அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டவையாகும்.

மாகாணப் பட்டியல்: பொது ஜன ஒழுங்கு, போலீஸ் அதிகாரங்களை நிர்வகித்தல் (தேசிய பாதுகாப்பு அல்லாத மாகாணங்களுக்கான போலீஸ் அதிகாரங்களை நிர்வகித்தல்) ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட எந்த விதமான ஆயுதம் தரித்த படைகளையும் பயன்படுத்த முடியாது.

மாகாண ரீதியான பொருளாதாரத் திட்டங்களை அமுலாக்கல், மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பட்டின சபைகள், தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைகளுக்கிடையேயான பாலங்கள், இவற்றுக்கு இடையேயான படகு போக்குவரத்துக் தவிர்ந்த நகரசாலைகள், பாலங்கள், படகு சேவைகள், விவசாயம், விவசாயசேவை, கூட்டுறவு கிராமிய அபிவிருத்தி, ஒரு

மாகாணத்திற்கு
மாகாணங்களு
ளும் நதிகள்
சன சேவை
வாழும் பகுதிக
கிழக்குப் பகுதிக
ணத்திற்குட்பட்ட
வும் கிடையாது)

பொதுவா
(ஸ்ரீலங்கா அரசு
சபைக்கும் பொது
ரங்கள்) திட்ட
த்தை வகுத்தல்,

அதனை நடை
மாகாண மட்டத்
கைகளை வகுத்
தியேக முதலீட்
வரையறை
விச்சேவை, உய
பல்கலைக் கழகங்க
ளும் பராமரித்த
வீடமைப்பும் நிர்
மைகளை கை
வழங்குதலும்,
சாய சேவை, சுகா
றவு, நீர்ப்பாசன
தொழில், கால்ந
தொழில் வழங்
பயணத்துறை.

மாகாண ம
மாகாண ரீதியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ங்கள் என்ன; தமிழ்மக்களை ...ப்படுத்துமா?

...மேற்பட்ட ...ட்டவே செல் ...ந்த தீர்ப்பா ...றிப்பு: தமிழர் ...ான வடக்கு ...ில் தனி மாகா ...ங்களின் ஏற்...

...ப்பட்டியல், ...கும் மாகாண ...வான அதிகா ...டல், திட்ட... தொடருதல்,

தொகைக்கு ஏற்ப மாநகர சபைக்கு உறுப்பினரின் எண்ணிக்கையை ஜனாதிபதி அறிவிப்பார்.

முதலமைச்சரை தலைமையாகக் கொண்ட அமைச்சரவை இருக்கும்.

மாகாணசபையானது ஒரு தலைவரையும் ஒரு துணைத் தலைவரையும் தெரிவு செய்யும். மாகாண சபை உறுப்பினர்களுடைய அதிகாரங்கள் மாகாணசபை வரைமுறையால் வகுக்கப்பட்டிருக்கும்.

...அதிகாரப் பரவலாக்கல், மாகாணசபை, ...சபைகள், கிழக்கில் மூன்று மாகாண ...கு மேல் ஆலோசனைகள் திருத்தங்கள், ...முடிவுக்கு வராமலிருக்கும் மாகாணசபை ...ி திட்டவுரை விளக்கமாகத் தெரிகிறது.

— நன்றி பொதுமை

...முறைப்படுத்தல், ...ினான தொள் ...ம், அரச பிரதி ... திருவனந்தபுர ...ுதல், கல்வி, கல் ...கல்வி, புதிய ...ிள திருவிழ ...ல்லை. ஏற்க ...னையுடன ...மைப்படுத்த ...ுவோம், விவ ...ாரம், கூட்டு ...ம், வீடமைப்பு ...ள், சுற்றுலாப் ...

...த்திரிக்கை ...ான மக்களி

மாகாண சபையின் எந்தவொரு நடவடிக்கையும் ஒழுங்கில்லாததென-நடைமுறைக்கு மாறுதலாக அமைந்திருந்ததெனக் கூற...

அரசுக்கு (ஸ்ரீலங்கா) சொந்தமான சொத்துக்களைப் பயன்படுத்தியதற்கு வரி கிடையாது.

மாகாணங்களுக்கான ஆளுநர் நிர்வாகத்தை இலகுவாக்குவதற்கான வழி முறைகளை வகுப்பார்.

ஆளுநரின் அதிகாரங்கள்: அரசியல் அரசியலமைப்புச் சட்ட திருத்தங்கள், மாவட்டசபைத் தேர்தல்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஒவ்வொரு ஆளுநர் இருப்பார்.

ஜனாதிபதியால் ஆளுநர் நியமிக்கப்படுவார். ஜனாதிபதியின் அனுசரணையோடு அவரது பதவிக் காலம், நிபந்தனைகள் போன்றவைகள் Article 4 (B) வழி வரையறுக்கப்படும்.

ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டு ஆளுநர் பதவியை விட்டு விலகலாம்.

எந்த வேளையிலும் அல்லது அடிக்கடியும், ஆளுநர் மாகாண சபைக்கு உத்தரவுகள் பிறப்பிக்கலாம். அந்த நேரம் எந்தவேளை, விரும் அடிக்கடியும் ஒத்திப்போடலாம்.

அமைச்சரவையின் ஆலோசனையைப் பொறுத்துத் தேவையாயின் ஆளுநர், மாகாண சபையில் பேசலாம்.

முதலாவது கூட்டத் தொடரில் இருந்து ஐந்து வருட காலம் மாகாண சபையின் பதவிக் காலமாகும்.

ஆளுநர் தமது விருப்பத்திற்கிணங்க, மாகாணசபை அங்கத்தினரில் ஒருவரை முதலமைச்சராக நியமிப்பார்.

முதல் மந்திரியைத் தலைமையாய்க் கொண்ட மந்திரி சபையின், அவர்கள் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த உதவியையும் ஆலோசனைகளையும் வழங்குவர்.

மாகாணசபைக்குப் பதிலளிக்கும் பொறுப்பை அமைச்சரவை கூட்டாக ஏற்றுக்கொள்ளும்.

அமைச்சரவை - மாகாணசபையின் சட்ட - ஒழுங்கு - அமுலாக்கல் சம்பந்தமான சகல முடிவுகளையும் முதல் அமைச்சர் ஆளுநருடன் கலந்து பேசுவார்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு உயர் நீதிமன்றம் இருக்கும்.

சட்டத்திற்கு முரணான நடவடிக்கையால் நடத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு நீதி வழங்கும் உரிமை உயர்நீதிமன்றத்திற்கு உண்டு.

சட்டம் - ஒழுங்கு: (ஸ்ரீலங்கா அரசின் பிரேரணைகளில் சட்டம் ஒழுங்கு பற்றி குறிப்பிடுவது பொது ஒழுங்கு - பொலிஸ் அதிகாரங்களை நிர்வகித்தலாகும்.)

ஸ்ரீலங்கா பொலிஸ் படை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (அ) தேசியப் பிரிவு (விசேட பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.)

(ஆ) ஒவ்வொரு மாகாணத்திற்குமான மாகாணப்பிரிவு.

இவை எல்லாவற்றிற்கும் பொலிஸ் மா அதிபர் (I.G.P) தலைமை வகிப்பார்.

ஸ்ரீலங்கா பொலிஸ் படையின் தலைவரே (I.G.P) மாகாணப் பொலிஸ் படைக்கும் உரிய உயர் அதிகாரியாக இருப்பார்.

விசேடப் பிரிவுகளை உள்ளடக்கிய தேசியப் பிரிவில் I.G.P D.I.G சீனியர் பொலிஸ் சுப்பிரண்டெண்ட் (SSP) பொலிஸ் சுப்பிரண்டெண்ட், உதவி பொலிஸ் சுப்பிரண்டெண்ட் (ASP) ஆகியோர் இருப்பர்.

மாகாணப் பிரிவானது DIG க்கு கட்டுப்பட்டிருக்கும். இப்பிரிவில் உள்ள SSP, SP, ASP, இவர்களுக்குள்ளடங்கிய ஏனையோரும் தேசிய பிரிவுக்கு கட்டுப்பட்டவர்கள் தான்.

மாகாணப் பிரிவில் A. S. ) உதவி இன்ஸ்பெக்டர், (CIP இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் (SI), சார்ஜண்ட், கான்ஸ

(13-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புமுனைக்...

(9-ம் பக்கத் தொடர்)

அமெரிக்கா தன்காலைப் பலமாக ஊன்ற எடுக்கும் முயற்சிகள் அப்பட்டமாகவே அம்பலமாகியுள்ளன.

இதனிடையில் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றத்தான் மாகாணசபை, பிரதேச சபை என புலம்புகிறது. எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைவைபூர்த்திசெய்யாத இந்நேரத்தில் இனப்பிரச்சினையை வெறுமனே அதிகார பங்கீட்டுப் பிரச்சனையாகக் காட்ட முயற்சிக்கப்படுகிறது. இதே வேளை மட்டக்களப்பின் படுவான் கரைப் பகுதியும், திருமலையில் சாம்பல் தீவு முதல் கும்புறுப்பிட்டி வரையிலான பகுதியும், மன்னாரின் அடம்பன் பகுதியும் ராணுவத்தின் வேட்டைக் காடாகியுள்ளது. தொடரும் இராணுவ அச்சுறுத்தலின் விளைவாக மக்கள் அகதிகளாக்கப்பட்டு விரட்டி அடிக்கப்படுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு என்ற மாயையை ஏற்படுத்திக் கொண்டு அதே சமயம் ஆட்சியினர் மேற்கொள்ளும் இராணுவத் திட்டங்களை இங்கு அவதானிக்க வேண்டியது அவசியமாகிறது.

(1) திருமலை நகரின் ஆக்கிரமிப்புக்கு பக்கத் துணையாக இருக்கும் வகையில் அதன் சுற்றுப்புறங்களிலிருந்து ஈழவரை விரட்டி முற்றாக அப்புறப்படுத்தல்.

(2) ஈழப்பிரதேங்களை துண்டாடும் தரைமார்க்கமான தொடர்புகளை இல்லாதொழிக்கும் வகையில் இராணுவ முகாம்களை நிறுவுதல், இந்த வகையில் முல்லைத் தீவுக்கும் திருமலைக்கும் இடையில் சுமார் 18 இராணுவ முகாம்களும் கல்குடா முதல் மூதூருக்கிடையில் சுமார் 13 இராணுவ முகாம்களும் நிறுவப்பட்டிருக்கிறது.

(3) வன்னிப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிறுவப்படும் புதிய இராணுவ முகாம்களினூடாக வடபகுதியில் போராளிகளின் நடமாட்டதைக் கட்டுப்படுத்தல்.

(4) குடாநாட்டினுள் இருக்கும் முகாம்களை மேலும் பலப்படுத்துவதோடு கடல் கண்காணிப்பை மேலும் இறுக்கமாக்கி போக்குவரத்துக்களை முற்றாக நிறுத்துதல், கரையோரப் பகுதிகளை கடுமையான கண்காணிப்பிற்கு இலக்காக்குதல்.

(5) ஆயுதபாணிகளாக்கப்பட்ட சிங்கள மக்களை, மலையக மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குடியமர்த்தி மலையக மக்களை விரட்டியடித்தல்.

இவ்வாறாக சிறிலங்கா அரசு ஈழப்பிரதேசத்தில் பெரும் பகுதியை இராணுவ விஸ்தரிப்பினூடாக விழுங்குவதற்கு தயார்படும் சூழலில் போராட்ட அமைப்புகள் அனைத்தும் எதிரியின்பால் தம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

## ஒரு கண் இருந்தால் மட்டும் போதுமா?

ஆனால் விடுதலை அமைப்புக்கள் தமக்கிடையே ஐக்கியத்தை வலியுறுத்தத் தவறி மோதும் சூழ்நிலை ஏற்படுவது கண்டிக்கத்தக்கது. போர்க் குணம் கொண்ட மக்களை வேலைத்திட்டத்தினூடாக ஒன்று திரட்டி எதிரிக்கெதிராக உக்கிரமமான போராட்டம் ஒன்றை நடாத்திச் செல்ல வேண்டியதே அவசியமாகும். இத்தகைய போராட்டப் போக்கில் நின்று நீடித்து நிலைக்க முடியாத சக்திகள் தன்னியல்பாகவே உதிர்ந்து செல்லும் என்பதே வரலாறு ஆகும். இதற்கும் எமது போராட்ட வளர்ச்சிப் போக்கே தகுந்த சாட்சியங்களை வழங்கக்கூடியதாயுள்ளது. புதிது புதிதாய் முளைவிட்ட எத்தனையோ அமைப்புக்கள் காலஓட்டத்துடன் நீடிக்க முடியாமல் உதிர்ந்து போனமை கண்கூடாகும். இதை விடுத்து விடுதலை அமைப்புக்கள் ஒன்றை ஒன்று அழிக்க முனைவது கண்டனத்திற்குரியது. அதேபோல் ஒரே ஒரு இயக்கம், அதுமட்டும் இருந்தாலே போதும் என நினைப்பது ஒரு மனிதன் தனக்கு ஒரு கண்மட்டும் போதும் என நினைத்து மற்றையதை அழிக்க நினைப்பதற்கு ஒப்பான செயலாகும்.

இவ்வாறான அமைப்புக்களிடையே தோன்றி வலுத்துவரும் போட்டி மனப்பான்மைகள் "அதிகார கைப்பற்றுதலுக்கான போட்டியின் அத்திவாரமே எனலாம். சிவில் நிருவாகத்தைக் கட்டுப்படுத்துவது அல்லது ஒழுங்குபடுத்துவது என்ற வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் சமுதாய மாறுதலுக்கான அம்சங்களை முழுமையாக [விளங்கிக் கொள்ள வேண்டும். அதில்லாத எழுந்தமான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படுவது ஏற்கனவே பல்வேறுபட்ட பிளவுகளில் சிக்கிக் கிடக்கும் இச்சமூகத்தில் மேலும் உட்பூசல்களை வளரச் செய்யவே பயன்படும். அத்துடன் அதிகாரக் கைப்பற்றலை மையப்படுத்திய அமைப்புக்களிடையிலான போட்டிகள் ஏற்கனவே சிறிலங்கா அரசு அதிகாரப் பரவலாக்கலினூடு பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள முனைவதை ஏற்றுக்கொள்வதாக ஆகிவிடும்.

ஒட்டுமொத்தமாக இவையனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது ஈழப்போராட்டம் ஒரு திருப்புமுனைக் கட்டத்தை எட்டிவருவதனை உணரமுடியும். திருப்பு முனைக்குரிய இக்காலகட்டத்தில் உறுதியான நடவடிக்கைகளே எதிர்காலப் போக்குகளை நிச்சயப் படுத்தும் என்பது ஒருபுறமிருக்க, இரண்டு வாரங்களுக்குள் போராளிகளின் முடிவு தெரியவரும் என்றும் சமாதானத்தை அவர்கள் விரும்பா விட்டால் யுத்தம் செய்ய நாம் தயார் என்றும் லலித் அத்துலத்முதலி தெரிவித்திருக்கிறார். இதன்படி பார்த்தால் பெரிய இராணுவத் தயாரிப்புடன் கூடிய தாக்குதல் விரைவில் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

—நன்றி- பொதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின்...

(11-ம் பக்கத் தொடர்)

டயின் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆட்சேர்ப்பு:-

தேசியப் பிரிவு ஆட்சேர்ப்புக்கும், மாகாணப் பிரிவிலுள்ளவர்களுக்கான பதவி உயர்வுக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். இதில் I.G.P, அரசதிபதியின் ஆலோசனையுடன் பொது ஆணைக்குழு பிரதிநிதி ஒருவர், தலைமை நீதிபதியின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அடங்குவர்.

மாகாணப் பிரிவுக்கான ஆட்சேர்ப்புக்கு மாகாண பொலிஸ் ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும். இதில் மாகாண D.I.G. அரசதிபதியின் ஆலோசனையுடன் பொது சேவை ஆணைக்குழு பிரதிநிதி, மாகாண முதலமைச்சர் ஆகியோர் அடங்குவர்.

மாகாண முதலமைச்சருடன் கலந்து I.G.P, D.I.G ஐ நியமிப்பார். I.G.P., க்கும் முதலமைச்சருக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படாவிடத்து அரசதிபதி முதலமைச்சருடன் கலந்து D.I.G. ஐ நியமிப்பார். ஏனைய பொலிஸ் அதிகாரிகளின் தேசியப் பிரிவினை ஸ்ரீலங்கா அரசு நியமிக்கும். ஒவ்வொரு மாகாணப் பிரிவுக்குமுரியதை அரசதிபதியின் அனுமதியுடன் மாகாண நிர்வாகம் நியமிக்கும்.

மாகாணத்தின் வலு அளவுகள் மாகாண மக்கள் தொகைக்கும், இது சார்ந்த ஏனைய பிரச்சினைகளையும் கவனத்திலெடுத்து வரையறுக்கப்படும். இத் தொகைகள் எல்லா மாகாணப் பிரிவுகளுக்கும் சமமாக பிரயோகிக்கப்படும்.

தேசியப் பிரிவில் பொலிஸ் கான்ஸ்டபிள், S.I, A.S.P. போன்ற உத்தியோகத்தர்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் அதே வேளையில் மாகாண A.S.P. போன்றவர்களை நியமிக்கும் சமயம் தேசியப் பிரிவிலும், மாகாணப் பிரிவிலும் கடமை புரியும் எல்லாப் பொலிஸ் உத்தியோகத்தரும் அந்தந்த மாகாணங்களிலுள்ள D.I.G.யின் உத்தரவுப்படியும், ஆணைப்படியும் கடமைபுரிய வேண்டும்.

பொது ஒழுங்கை நிர்வகிப்பதிலும், பொலிஸ் அதிகாரத்தினை நிர்வகிப்பது மூலமான மாகாண அதிகாரத்தினை நிலைநாட்டுவதற்கு D.I.G. பொறுப்புடையவராவார்.

ஒரு மாகாணத்தில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்படும் பட்சத்தில் பொது ஒழுங்கையும் சட்டத்தையும் மீள நாட்டும் பொருட்டு தேசியப் பிரிவின் விசேட பிரிவுகளை அம்மாகாணத்திற்கு I. G. P விரும்பியபடி அனுப்பலாம்.

மொழிகளின் தராதரம் பற்றி (பொலிஸ்) எல்லாத் தேசியப் பிரிவினரும், மாகாணப் பிரிவினரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் சிங்களத்திலும், தமிழிலும் குறிக்கப்பட்ட தராதரம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

ஸ்ரீலங்கா பொலிஸ் படையில் சேவை புரியும் அனைவரும் அவரவர் தாய் மொழியில் தராதரம் உடையவராய் இருத்தல் வேண்டும். முதலாவது பதவி உயர்வுக்கு அவரது தாய்மொழி தவிர்ந்த ஏனைய ஒரு மொழியிலும் இரண்டாவது பதவி உயர்வுக்கு மூன்றாவது மொழியிலும் தேர்ச்சி அடைய வேண்டும்.

நிலம் — நிலத்திரவு:-

தேசிய காணி ஆணைக்குழு ஸ்ரீலங்கா அரசாங்கம், தேசிய அரச காணிகளைப் பயன்படுத்தும் பொருட்டும், அதற்கான தேசிய கொள்கைகளை வகுக்கும் பொருட்டும் தேசிய காணி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும். இத் தேசிய காணி ஆணைக்குழுவில் எல்லா மாகாணசபைகளின் பிரதிநிதிகளும் அங்கம் பெறுவர். இவ் ஆணைக்குழுவின் தேசிய கொள்கைகளின் வரையறைக்குட்பட்டே மாகாணசபைகள் செயற்பட வேண்டும்.

நிலப்பயன்பாடு: அரசுக் காணி, பொதுப் பொறுப்பு காணி குடியேற்றத்துக்குரிய காணிக்கு அல்லது காணிக்கு மேலால், காணிக்குத் தனை மாற்றமும் அந்நியமாதல், நிலப் பயன்பாடு, காணிச் சீர்திருத்தம், நில அபிவிருத்தி, இவற்றைப் பற்றிய சட்டங்கள் மாகாண சபையால் தீர்மானிக்கப்படும்.

தேசிய காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கும் முரணாகாத விதத்தில் இந்த மாகாணசபைகள் நிலங்களைப் பயன்படுத்த முடியும். அரசாங்கத்திற்குத் தேவையான காணிகளை மாகாணசபையுடன் கலந்து அரசாங்கம் கையகப்படுத்தும்.

மாகாணங்களுக்கு இடையிலான நீர்ப்பாசனத் திட்டங்கள், காணி அபிவிருத்தித் திட்டங்கள், ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு ஊடாகப் பாயும் மகாவலி போன்ற நதிகளைப் பயன்படுத்துதல், திசை திருப்புதல் போன்ற சகலமும் அரசாங்கத்துக்குரியது.

மாகாண கல்வி அதிகார சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்:

மாகாண கல்வி அதிகாரசபையானது குறிப்பிட்ட பாடசாலைகள் (பல்கலைக்கழகங்கள், விசேட அபிவிருத்தி வேலைகளுக்காக நிறுவப்படும் கல்லூரிகள், தேசிய பாடசாலைகள்) தவிர்ந்த ஏனைய ஆரம்பப் பாடசாலை, பாடசாலைகளின் நிர்வாகம், மேற்பார்வை ஆகியவற்றைக் கவனிக்கும். இவற்றிற்கு ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்த்தல், கல்வி அமைச்சின் கட்டுப்பாடுகளுக்கமைய பாடசாலைகளை உருவாக்கல், பொதுப் பரீட்சை ஆணையாளரின் அனுமதியுடன் பரீட்சைகளை நடாத்தல், பாடசாலைகளை நிர்மாணித்தல், நூல் நிலையங்களை நிர்மாணித்தல், விளையாட்டு மைதானங்களை நிர்வகித்தல் போன்றவைகளைக் கவனிக்கும்.

மேற்கண்ட பிரேரணைகளை ஆழ்ந்து அவதானிப்பவர் எவரும் இது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையை ஒருவேளையும் தீர்த்து வைக்காது என்பதை இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

ஸ்ரீலங்கா அரசின் பிரேரணைகள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள், குறைபாடுகள் அவற்றில் காணப்படுகின்றன.

1. ஜெ. ஆர். அரசினால் 1977ம் ஆண்டு தேர்தலின் பின்னர் கொண்டு வரப்பட்ட முதலாளித்துவ ஒற்றையாட்சி அமைப்பின் கீழேயே தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்கள் வாழவேண்டியுள்ளது.

2. நிலம்— நிலப் பயன்பாடு குறித்ததான எந்தவித பூரணமான உடன்பாடும், குடியேற்றங்கள் தொடர்பான எதுவித தீர்வும் ஏற்படவில்லை.

3. தமிழ்த் தாயகம் எல்லை வரையறையும் இதில் இல்லை.

4. மாகாணசபை தீர்வுக்கான சட்டத் திருத்தம்— ஸ்ரீலங்கா அரசின் பாராளுமன்றத்தின் 2/3 வாக்கால் மாற்றப்படுமிடத்து இது நிரந்தரமான சட்ட திருத்தமாக இருக்க முடியாது. ஆட்சி மாற்றத்தில் நிராகரிக்கப்படலாம்.

— நன்றி 'பாலம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவு சொன்னது யாரோ?

நவம்பர் எட்டாம் தேதி தான் தமிழ் நாட்டில் உள்ள விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

ஆனால் இப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை அக்டோபர் 31ம் தேதியே இலங்கையில் சில பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன.

இங்கு ரகசியமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை அங்கே எப்படி வெளியாயிற்று?

இலங்கையில் இருந்து வெளிவரும் சண்டே ஒப்சர்வர் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் அக்டோபர் 31ம் தேதி இதழில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலித் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் வருகிற ஜனவரி திங்கள் முதல் சுதந்திரத் தனி ஈழத்தைப் பிரகடனம் செய்யப் போவதாக அறிவித்திருந்தார்.

இதனால் இந்திய அரசாங்கத்திற்கு அவர் மீது கடுமையான கோபம் ஏற்பட்டிருக்கிறது. அவர் மீது இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பாயப் போகின்றன. இன்னும் சில வாரங்களில் அவர்கள் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பும் நிலை ஏற்படும்.

இப்படி ஒரு செய்தியை அக்ரோபர் 31-ம் தேதி இலங்கை சண்டே ஒப்சர்வர் வெளியிட்டிருக்கிறது.

இப்படி ஒரு செய்தியை இலங்கை ஏடு வெளியிட்டிருக்கிறது என்றால் இந்திய அரசாங்கமோ, அல்லது மாநில அரசாங்கமோதான் காரணமாக இருந்திருக்க முடியும்!

திட்டமிட்டு விடுதலைப் புலிகளை வேட்டையாடி இருக்கிறார்கள்! இலங்கை அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்துவிட்டு வேட்டையாடி இருக்கிறார்கள்! இதற்கு நமது முதல்வர் எம். ஜி. ஆரும் துணை போயிருக்கிறார்!

—மாலைமணி

## லத்தீன் அமெரிக்க ...

(8-ம் பக்கத் தொடர்)

தனது பொம்மை ஆட்சியை நடத்துவது என்பது பிரதானமாக உள்ளது. லத்தீன் அமெரிக்காவைப் போல உலகில் வேறு எந்த பிராந்தியத்திலும் இத்தனை ராணுவ அதிகார கைப்பற்றல்கள் நடந்ததில்லை. கடந்த 150 ஆண்டுகளில் அங்கு 550 தடவை ராணுவம் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளது. இதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியமே பெரும்பாலும் காரணமாக இருந்துள்ளது. தனக்கு எதிரான ஆட்சிகளைக் கவிழ்ப்பதும், தனது கைப்பொம்மைகளை ஆட்சியில் அமர்த்துவதும் அதன் மேலாதிக்க நலன்களுக்குத் தேவையாகிறது. இல்லையென்றால் நிறுவப்படும் பாசிச சர்வாதிகார பிற்போக்கு ஆட்சிக்கு ஆதரவு அளித்து தனது மேலாதிக்கத்தை நிறுவுகிறது.

வரலாறு முழுவதும்;

1954ல் சி. ஐ. ஏ கூலிப்படைகளைத் திரட்டி, சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜாகபோ அர்பென்ஸ் அரசாங்கத்தை கவிழ்க்க படையெடுத்தது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்து, ஆட்சியைக் கவிழ்த்து தனது பொம்மை ஆட்சியை நிறுவியது அமெரிக்கா.

1960ல் விடுதலை அடைந்திருந்த கியூபா மீது படையெடுத்தது. இதே ஆண்டில் பனாமா கால்வாயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க ராணுவ துருப்புகள் பனாமா மக்களின் போராட்டங்களை கடுமையாக ஒடுக்கின. மேலும் எதிர்ப்புரட்சி பாசிஸ்ட் சோமசாவுக்கு ஆதரவாக நிகராகுவாவிற்கு எதிராக தனது யுத்தக்கப்பல்களை அதன் துறைமுகத்தில் கொண்டுவந்து நிறுத்திவைத்தது.

1964ல் பனாமா மக்கள் போராட்டங்களை தனது ராணுவத்தை ஏவிவிட்டு ஒடுங்கியது. ஏப்ரலில் பிரேசிலில் பாராளுமன்ற அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. டிசம்பரில் கயானா அரசாங்கத்தை சதிசெய்து கவிழ்த்தது.

1973ல் அமெரிக்காவும், அதன் சி. ஐ. ஏ. யும் செய்த படுகொலைகள் உலகம் அறிந்ததுதான். தேர்ந்தெடுக்ககப்பட்ட சீர்திருத்தவாத அலெண்டேவை படுகொலை செய்து ஒரு பாசிஸ்ட் கும்பல் அதிகாரத்தைக் கைப்பற்ற வழி செய்தது.

1983-ல் பல்வேறு சாக்குப்போக்குகளை சொல்லி சின்னஞ்சிறு நாடான கிரெனடா (கரீபியன் பகுதி) மீது பகிரங்கமாக ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடுத்தது.

**இன்று...**

இன்று பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், உள்நாட்டு பிற்போக்கு பாசிச கும்பல்களை எதிர்த்தும் மக்கள் போராட்டங்கள் வெடித்தெழுந்து வருவதைப் பார்த்து, எங்கே தனது மேலாதிக்கம் நழுவிவிடுமோ என்ற அவசரத்தில் (ஏற்கனவே நிகராகுவா இதன் பிடியிலிருந்து விடுபட்டுள்ளது) தனது கொலை பாதக சதிவேலைகளை தீவிரமாக செய்துவருகிறது. சுமார் 70க்கும் மேற்பட்ட அமெரிக்க கடற்படை, விமானப்படை தளங்களும், பிற அமெரிக்க ராணுவ கேந்திரங்களும் உள்ளன.

இவ்வாறு அமெரிக்கா லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கடுமையாகச் சுரண்டினாலும், அரசியல் -ராணுவ ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தாலும் அதனால் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. நிகாராகுவா, எல்சல்வடோர், கவுதிமாலா, சிலி என்று பல்வேறு நாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அடிவருடி கும்பல்களையும் எதிர்த்து தீரத்துடன் மேலும் மேலும் மக்கள் போராடி வருகிறார்கள்.

இப்படிப்பட்ட போராட்டங்கள் நாளை அமெரிக்க பூதத்தை லத்தீன் அமெரிக்காவிலிருந்து ஓட ஓட விரட்டும், இதிலிருந்து ஒருக்காலும் அப்பூதம் தப்பமுடியாது.

—நன்றி கேடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தீவும் இதன் பூர்வ குடிகளும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எனவே மகா வம்சம் குறிப்பிடும் பல சம்பவங்கள் பொய்யான தன்மை படைத்தவையாகவே இருக்கின்றன. சிங்கத்தின் வழித்தோன்றல் என்ற கதையே கேலிக்கிடமான தொன்றாகும்.

எனவே விஜயனின் வருகைக்கு முன்னர் இங்கு வாழ்ந்தவர்கள் குறிப்பிடும் இயக்கர், நாகர் என்போர் திராவிட மொழி பேசியவர்கள் என்பதைத்தான் நாம் நம்பலாம். இதற்கான சான்றுகள் மிகத் தாராளமாக உண்டு. முதலில் புத்த பெருமான் வருகை தந்த போது இலங்கையின் நம்பி பெயர் மகா நாகன் என்பதாகும். நாக என்னும் அடைப் பெயர் உள்ளதிலும் அந்த அரச பரம்பரை நாகர்களுடையது அல்லது நாகர் சம்பந்த முள்ளது என்றே கொள்ள வேண்டும்.

இலங்கையில் நாகர்கள் மிகுந்த அதிகாரமும், செல்வாக்கும் உடையவர்களாகவும், நாகரீகத்திலும் மேம்பட்டவர்களாகவும் இருந்துள்ளனர். இருக்கு வேதத்தில் ஆரியர்கள், நாகர்கள் என்பவர்களை அதிக பிரயத்தனத்துடன் எதிர்த்து அவர்கள் நடத்துகின்றனர். இலங்கையில் விஜயனின் பின்னர் வந்த அரசர்களுக்கு நாகர் சம்பந்தம் இருப்பதைக் காணலாம். இளநாகன், சூளநாகன், ஸ்ரீநாகன் என்னும் அரசர்கள் இலங்கையை ஆண்டுள்ளனர். நாகர்கள் இலங்கையின் அரசியல் வாழ்வில் மிக உயர்ந்த இடத்தை வகித்தவர்கள் என்று அறியக்கூடியதாக உள்ளது.

உண்மையிலேயே விஜயன் வட இந்தியாவில் இருந்து வந்தவனாக இருந்தால், அவனுடைய அரசவம்சத்தில் எவ்வாறு நாகர் பெயர்கள் இடம்பெறும்? எனவே விஜயன் என்பவன் வட இந்தியாவிலிருந்தும் வந்திருப்பினும், இங்குள்ள நாகர் இனத்தோடு இரண்டறக் கலந்து ஐக்கியமாகிவிட்டான்... அதனால்தான் நாகர்களின் சாம்ராஜ்யத்தில் பெரிய பதவிகளும் வாய்ப்புக்கள் அவனுக்குக் கிடைத்தன.

ஆரியர்கள் ஒருபோதும் குளம் கட்டி நீர்ப்பாசனம் செய்து வாழ்ந்த சாதியர் அல்ல. அவர்கள் ஒரு நாடோடிக் கூட்டமே. ஆரியர்கள் தெற்கு நோக்கி வருமுன் கணவாய் மூலம் இந்தியாவினுள் பிரவேசித்த போது தம்மை விட நாகரீகத்தில் முதிர்ச்சியடைந்த மக்களைக் கண்டனர். அவர்கள் தான் திராவிடர்கள். அவர்கள் மிருகங்களை வளர்த்தனர். அவர்கள் கட்டி நீர்ப்பாசனம் செய்து பயிர் விளைத்தனர். கலை கட்டிக் கட்டமொழுவர். சிந்தனையாளர்கள் உண்மை. ஆரியர்களாக இருந்திருந்தால் இவர்களும் அணைக்கட்டி கட்டி நீர்ப்பாசனமும் செய்யும் முறைகள் தெரிந்திருக்க நியாயமில்லை.

இலங்கையில் மகா பராக்கிரம பாகுவின் காலத்திலேயே, அதிக குளங்கள் நிர்மாணிக்கப்பட்டும், புதுக்கப்பட்டும் விவசாயம் செழித்திருந்தது. இவன் அரசனின் தாயும், தகப்பன் வழி பாட்டனும் தமிழர்களே. மேலும் இலங்கையில் அரச குடும்பங்கள் தமது அந்தஸ்துக்கு சமமாக தென்னிந்திய அரச குடும்பங்களுடன்தான் திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். இலங்கையின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்பவனும் கண்ணுச்சாமியும் ஒரு தெலுங்கனே. அது தவிர 1815ஆம் ஆண்டின் பின்னர்கூட கண்டிய புத்திரருமாரும், மற்றவர்களும் அரசனுக்கு அதற்கு தமிழர்களையே தேடித் திரிந்தார்கள்.

நாக வழிபாடானது இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் நடைபெற்று வந்த காரியமாகவே தெரிகிறது. எங்கெனும் இன்றும் அகழ்வாராய்ச்சியின்போது நாகபடத்துடன் கூடிய உருக்கேடன் இலங்கையில் பல பாகங்களிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளது. அது மட்டுமல்லாது புத்தபிரான் நாகதீபத்துக்கு (யாழ்ப்பாணம் நயினாதீவு) விஜயம் செய்து இரு நாக இளவரசர்களுக்கிடையே உள்ள பிணக்கைத் தீர்த்து வைத்ததாக கதை ஒன்று கூறுகிறது. நாகர்களும், இயக்கர்களும் பேசிய மொழி தமிழா அல்லது திராவிடம் சார்ந்த ஒரு மொழியா என்ற கேள்வி இங்கு எழலாம். இலங்கையிலுள்ள இடப்பெயர்கள், ஆற்றுப் பெயர்கள், ஆட்களின் பெயர்கள் தான் எமக்கு பழமையை ஆராய உதவியாக இருக்கும். இப்பெயர்கள் பெரும்பாலும் எலு, தமிழ் ஆகிய மொழிகளுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றன.

சிங்கள மொழியில் ஊர்களின் பெயர்கள் பின்வரும் விகுதிகளுடன் அதிகமாக முடிவடைகின்றன.

...கல ...கம ...தொட ...குளம
...ஊறிய ...பிட்டிய ...பொல...
...தெல்ல, வில,

...கல: கல் அல்லது கல்லு என்ற தமிழ் சொல்லின் திரிபு வடிவம் (கல்) என்பதன் திரிபே குருநாகல என அறியலாம். அங்கு உள்ள பெரும் கருங்கல் இதற்கு சான்றாகும்.
...கம... கமம் செய்யும் இடம்.

வெலிக்கடை என்பதே வெளிகடை. அக்கமம் என்றே அவ்விதம். அகம் (உள்), வெளி என்பன தமிழ்ச் சொற்கள். அகம் உள்ளும், வெளிகம வெளிப்புறத்திலும் உள்ள கிராமங்கள்.

...குளம ...குளம் என்பது சிர்த்தேகல் கம. பண்டைய திராவிடச் சொல். அநுராதபுரம் பகுதியில் பல ஊர்களின் பெயர்கள் குளத்தில் முடிவடைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்ல: மூலை என்பதன் திரிபு. களட்டுமூலை என்பது சிங்களத்தில் ஹல்து முல்ல. வண்ணத்திமூலை என்பது வனத்தமுல்ல.

பிட்டிய: பிட்டி என்பது குவியல் என்பதாகும், அல்லது மண், கல்லு ஆகியவற்றால் ஆன மேடான இடம். வெல்லப்பட்டி என்பது வெள்ளம்பிட்டி எனக் கொள்ளலாம். கல்பிட்டி, நாரஹென்பிட்டி என்பனவற்றைப் பார்க்கலாம்.

பொல: பனை என்பது திரிபு. பனை என்பது மக்கள் கூடுமிடம், அல்லது சந்தை கூடுமிடம். ஹெற்றிபொல என்பது செட்டிபனை என்பதாகும். தமிழ் வற்றுப் பனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சிங்களத்தில் சந்தையை பொல என்றே கூறுகிறார்கள்.

வெல, வில: வெளி, வயல், வளி, வனை என்பவற்றின் திரிபாகும். பண்டாரவெளி என்பது பண்டாரவளை வெளிமேடு என்பது வலிமட. மாரு வயல் அல்லது மாருவெளி என்பது மாரவில ஆகியுள்ளது.

இவை மாத்திரமல்ல, சமீபகாலத்தில் அதாவது 60 அல்லது 70 ஆண்டுகளில் சிங்கள மயமாகிய வடமேல் மாகாணத்தின் பல ஊர்ப்பெயர்கள் இன்னமும் சுத்த தமிழாகவே உள்ளன. புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு வரையிலான பிரதேசங்கள் இன்னமும் முற்றுமுழுதான சிங்கள மாற்றத்துக்கு உட்படாமல் உள்ளன.

வென்னப்புவ (வனப்பு) என்கிற ஊரில் உள்ள நஞ்சுண்டான் கரை (ய) என்கிற கிராமம் இன்றும் தமிழ்ப் பெயருடனேயே இருக்கிறது. நீர்கொழும்பில் உள்ள கொட்டாஞ்சேனை என்பனவும் நல் உதாரணங்களாகும். சிலாபம் பஸ் நிலையம் அமைந்துள்ள இடம் ஈச்சம் பிட்டி என்பதாகும். இன்றும் அங்குள்ள கள்ளுத் தவறணைப் பெயர் பலகையில் அதைக் காணலாம். அதுமாத்திரமல்ல முன்னேஸ்வரம் கோவில் திருவிழா விஞ்ஞாபனத்தில் கரவெட்டி திருவிழா என கறவிற்ற என்ற ஊராரின் திருவிழா குறிக்கப்படுகிறது. இம்மாற்றங்களுக்கு முக்கிய காரணம் அங்குள்ள மக்கள் போத்துக்கேயரின் வருகைக்குப் பின்னர் கத்தோலிக்கராகி பெரேரா, சில்வா, பர்னாந்து என்ற பெயர் மாற்றம் பெற்றதுமன்றி, 1933-ம் ஆண்டு எட்மண்ட் பீரிஸ் ஆண்டகையினால் அங்குள்ள பெரும்பாலான தமிழ் மொழிப் பாடசாலைகள் சிங்கள மொழிப் பாடசாலைகள் ஆக்கப்பட்டதுதான். அங்குள்ள சில தமிழ் படித்தவர்கள் தங்களை தமிழ் பேசும் சிங்களவர் எனக்கூறி மாய்கிறார்கள்.

அதே நேரத்தில் மருத மரம் சூழ்ந்த இடமாகிய மருதங்குளம் இன்னமும் சைவத் தமிழர்களையுடைய ஊராகவேஉள்ளது. சுற்றிவர சிங்கள மொழிபேசும் மக்கள் உள்ளனர். அவர்களும் ஒரு காலத்தில் தமிழ் பேசியவர்கள்தான். ஆனால் மருதங்குளம் வாசிகள் இராஜகுரு சேனாதிபதிகளாகவே இருந்தமையால் அவர்கள் தமிழர்களாகவே வாழ்கிறார்கள்.

போத்துக்கீசரின் வருகையின் பின் நடந்த மிகப் பெரிய சிங்களமாகல் வடமேல் மாகாணத்தில் நடைபெற்றுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க புத்தசமயம் இங்கு பொங்கிப் பிரவாகித்த நாட்களில் மக்களின் மொழிமாற்றம் எவ்வளவு துரிதமாக நடந்திருக்கும் என்பதை நாம் ஊகிக்க வேண்டும்' ஏனென்றால் மதமாற்றங்களும் கல்வி போதித்தலும் தான் இலங்கையில் தமிழ் மொழியை சிறுமைப்படுத்தி விட்டன என்பதை நாம் அனுமானிக்கலாம்.

சமீப காலங்களில் இவர்கள், தமிழ் விவாகங்களினால் பிறந்த இளம் சந்ததியினால் பெரும்பான்மையோர் சிங்களமாகவே மாறிப்போனதை நாம் கண்ணுறக் கண்டுள்ளோம்.

இவை மாத்திரமல்ல தென்னிலங்கை மக்களின் பெயர்கள் சில எமக்கு மிகவும் வியப்பையே தருகின்றன. ராசபுத்திரம் என்பது இன்று எல்லோரும் அறிந்த ஒரு பெயர். சிங்கள மொழியில் "ராச", "புத்திரம்" என்று ஒரு போதும் குறிப்பிடுவதில்லை. அது 'ராஜ புத்ர' எனவே குறிக்கப்படும். அவ்வாறாயின் இந்த ராச புத்திரம் யார்? மாத்தறை, சங்கால ஆகிய பகுதிகளில் வெங்கப்புலி, வெல்லப்புலி, கொடிப்புலி, பெரும்புலி, மாணவப்புலி என்ற குடும்பப் பெயர்கள் காணப்படுகின்றன. இந்தப்புலிகள் யார்? சிங்கள மக்களில் ஒரு நற்பழக்கம் உண்டு. பரம்பரைக்கென ஒருபெயரை வைத்திருப்பதுதான். தற்போது ஸ்ரீஜயவர்த்தன புர கோட்டே நகரசபைத் தலைவரின் பெயர் அசோகா டீ பெரும்புலி என்பதாகும்.

இந்த வேங்கைப்புலி, வெள்ளைப்புலி, கொடிப்புலி, பெரும்புலி, மாணப்புலி ஆகியோரின் வரலாறுகள் எம்மை பெரும் திகைப்புக்குள்ளாக்கலாம். யார் ஆராய்ச்சி செய்வார்கள்? அதற்கு இனி முடியுமா?

## சுவிற்சலாந்தில்...

(6ம் பக்கத் தொடர்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எந்தவித நிர்ப்பந்தங்களையும் புலிகளின் மீது மேற்கொள்ள இந்தியா முயலக்கூடாது எனக்கோரியும் தலைவர் பிரபாகரன் ஆலோசகர் பாலசிங்கம், மற்றும் தோழர்களையும் கைது செய்து சாதாரண குற்றவாளிகள்போல் நடத்தியதை ஆட்சேபித்தும் போராட்ட ஆயுதங்களையும் தகவல் தொடர்புச் சாதனங்களையும் பறிமுதல் செய்ததைக் கண்டித்தும் சர்வதேச அரங்கில் கிழர்ந்த உரிமைக்காகப் போராடும் விடுதலை அமைப்புக்களுக்கு பாரததேசம் எவ்வாறு ஆதரவு வழங்குகின்றதோ அதேபோல் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் உதவுமாறு கோரியும் சுவிற்சலாந்தின் உலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இவ் ஊர்வலத்தை ஒழுங்கு செய்து இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழருக்கு ...

(6ம் பக்கத் தொடர்)

பறித்த அரசும் ஏன் இரண்டே நாட்களில் திருப்பிக் கொடுத்தது? மக்களின் எதிர்ப்பு வராமல் இருப்பின் கொடுத்திருக்குமா? இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னால் யோசிக்கவில்லை. மக்களிடம் எதிர்ப்பு உருவாகிறது என்று தெரிந்தவுடன் இந்திய அரசு தனக்கும் இந்த நடவடிக்கைக்கும் சம்பந்தமில்லையென்று அறிவித்து விட்டது. படிப்படியாக தமிழக அரசு அதை திருப்பிக் கொடுத்து விட்டது. ஏனென்றால், பிரச்சினை முற்றுவதை இந்த இரு அரசுகளும் விரும்பவில்லை.

நிரு: தமிழ்க் குழுக்களிடமிருந்து செய்தித் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றியது மத்திய அரசு அல்ல; தமிழ் நாட்டு அரசு தான். முன்பெல்லாம் தமிழ்ப் போராளிகளுக்கு ([illegible]படையினருக்கு) ஆதரவு வழங்கிய முதலமைச்சர், மனம் மாறியதற்கு என்ன காரணம்?

நெடு: தமிழ் நாட்டு முதலமைச்சரைப் பொறுத்த வரையில், அவர் எப்போதும் இந்திய அரசு என்ன நிலையிலிருக்கிறதோ, அந்த நிலையை அவரும் எடுத்து வந்திருக்கிறார். இந்திய அரசுக்கு மாறான நிலையை அவர் ஒருபோதும் எடுத்ததில்லை. இலங்கைத் தமிழரின் பிரச்சினையை இந்திய அரசிடம் சொல்லி அதை வற்புறுத்த வேண்டிய அவர் இந்திய அரசு என்ன செய்கிறதோ, அதை இலங்கைத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு வற்புறுத்துவதையே தமது வேலையாகக் கொண்டிருக்கிறார். ஆகவே அவரிடமிருந்து இதற்கு மேல் எதையும் எதிர்பார்க்க முடியாது.

நிரு: இந்தியாவின் உதவியும் தமிழ் நாட்டின் உறுதுணையுமின்றி இலங்கைப் போராளிகளினால், திறமையுடன் செயல்பட முடியுமா?

நெடு: இப்போது இலங்கைத் தமிழர் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மற்றவர்களும் ஏராளமாக இராணுவத்தை முறியடித்து பல பகுதிகளை தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது தமிழ் மக்களின் ஆதரவினாலும், இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவினாலும் தான் அதைச் செய்திருக்கிறார்கள். பகிரங்கமாக அவர்களுக்கு இந்திய அரசோ, தமிழக அரசோ எந்த உதவியும் செய்யவில்லை என்பது உண்மை. அப்படி அவர்கள் உதவி செய்திருப்பார்களானால், எப்பவோ இந்தப் பிரச்சினை முடிந்து போயிருக்கும். ஆனாலும் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஆதரவு இருக்கும்வரையில் அவர்கள் தொடர்ந்து போராடுவார்கள். அந்தப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும்.

நிரு: இந்தியா தமிழ்க்குழுக்களின் நடவடிக்கைகளை ஏற்கனவே கட்டுப்படுத்திவருகிறது. ஒன்று சமாதானத் திட்டம் குறித்து இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துங்கள்; அல்லது இந்தியாவை விட்டு வெளியேறுங்கள் என்று இந்தியா கூறினால் தமிழ்ப் போராட்டக் குழுக்களின் நிலைமை என்ன?

நெடு: இந்தியா அப்படியொரு நடவடிக்கை எடுப்பதற்குத் துணியுமா என்பது முதல் கேள்வி. காரணம் இந்தியாவிலுள்ள ஆறுகோடி தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொள்ள மத்திய அரசு விரும்பாது. அதையும் மீறி அவர்கள் குறிப்பிட்ட நடவடிக்கை எடுப்பார்களானால், இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு வேறு வழியில்லை. அவர்கள் இலங்கை சென்று, தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள். அவர்களுக்கு ஆதரவாகத் தமிழ் நாட்டிலும் போராட்டங்கள் வெடிக்கும். கிளர்ச்சிகள் வலுக்கும்.

நிரு: கிழக்கு மாகாணத்தையும் வடமாகாணத்தையும் ஒன்றாக இணைக்க முடியாது என்பதில் இலங்கை அரசு பிடிவாதமாக இருக்கிறது. இருமாகாணங்களும் இணைக்கப்படாத எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தமிழ்க் குழுக்களும் கூறி வருகின்றன. இந்தப் பிரச்சினைக்கு என்ன தான் முடிவு?

நெடு: இந்தப் பிரச்சினை முக்கியத்துவம் பெறுவதற்கு இதுதான் காரணம். இலங்கை அரசு தமிழர்களை பிரித்தாள நினைக்கிறது. வடக்கு மாகாணத் தமிழர்களை வேறாகவும், கிழக்கு மாகாணத் தமிழர்களை வேறாகவும் ஆக்கி அவர்கள் நடுவே ஒரு பிளவை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு திட்டமிடுகிறது. தமிழர்கள் ஒன்றுபட்டால், அவர்களை வெல்வது கடினம். அவர்களைப் பிரித்துவைப்பதன் மூலமே அடக்கி ஆள முடியும் என்று இலங்கைஅரசு நினைக்கிறது. ஆகவே, தமிழர்களுக்கு ஒன்றுபட்ட தாயகம் தான் வேண்டும். அப்போதுதான் தமிழர்கள் பாதுகாப்பாக வாழமுடியும் என்று தமிழர்கள் நினைப்பதில் தவறில்லை. இந்தியாவில்கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழகத்தில் பல பகுதிகள் வெள்ளையர் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டோடு இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய குமரிமாவட்டம் வெள்ளையர் ஆண்ட காலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தது. எதனால் அதைப் பிரித்து தமிழகத்தோடு சேர்த்தார்கள்? மொழிவழி மாநிலங்கள் உருவாகும் போது ஒருமொழி பேசிய மக்களுக்கு, ஒன்றாக இணைக்கப்பட்ட தாயகங்கள் இணைக்கப்பட்டால் தான், அவர்கள் ஒற்றுமையாக வாழமுடியும்; தங்களுடையமொழி, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை வளர்க்க முடியும். இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட அடிப்படை நோக்கம் அதுதான். அந்த நோக்கத்தினாலேதான் இலங்கைத் தமிழர்கள் தங்கள் பகுதிகளை ஒன்றாக இணைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

நிரு: இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் வடமாகாணத்துடன் கிழக்கு மாகாணமும் இணைக்கப்படுவதை விரும்பவில்லையே?

நெடு: விரும்ப வில்லையென சிங்களவர்கள் பிரச்சாரம் செய்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன். கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் மதத்தில் வேறுபட்டவர்களானாலும், அவர்கள் அடிப்படையில் தமிழர்கள். அவர்களின் தாய்மொழி தமிழ். அவர்களுக்குத் தமிழைத் தவிர வேறெதுவும் தெரியாது. அவர்கள் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள். இந்துவானாலும், கிறிஸ்தவர்களானாலும், முஸ்லிம்களானாலும் அவர்கள் தமிழர்கள். அதை மறைப்பதற்கு எடுக்கும் முயற்சி வெற்றிபெறாது.

நிரு: தமிழ்ப்போராளிக் குழுக்களுக்குள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நீங்கள் அதிகம் ஆதரவு வழங்குவதாக கூறப்படுவது உண்மையா?

நெடு: என்னைப் பொறுத்வரையில் தமிழீழம் மலரவேண்டும். இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினை தீர வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரேவழி, வள்ளுவர் பெருந்தகை சொன்னது போல, ''இதனை இவன் முடிக்குமென்றாய்ந்து அதனை அவன் கண் விடல்,'' இந்தப் பிரச்சினையை யாரால் வெற்றிகரமாக முடிக்க முடியும்... யாருக்கு அத்தகைய வலிமை இருக்கிறது என்பதை நான் பார்க்கிறேன். அந்த வலிமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இருக்கிறது. அவர்களுக்கு தமிழீழ மக்கள் பேராதரவு கொடுக்கிறார்கள். ஆகவே நானும் அவர்கள் மூலம் இது வெற்றியடையுமென்று நினைக்கிற காரணத்தினால் அவர்களுக்கு என்னுடைய ஆதரவைக் கொடுக்கிறேன். மற்றவர்களையும் ஆதரவு கொடுக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

நிரு: தமிழ்க் குழுக்களுக்குள் ஒற்றுமையில்லை. இவர்களுக்குள் முதல் ஒற்றுமையைக் கொண்டுவர உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தலாமே?

நெடு: ஒற்றுமை நல்ல விஷயம் தான். ஆனால் ஒற்றுமை போர்க்களத்தில் வரவேண்டும். இந்தியாவிலோ பிரிட்டனிலோ இருந்து கொண்டு ஒற்றுமையைப் பேசுவது பயனில்லை. போர்க்களத்தில் யார் நிற்கிறார்கள்? அந்த மக்களோடு யார் நின்று போராடுகிறார்கள்? உண்மையிலேயே விடுதலை பெற வேண்டுமென்பவர்கள் இதில் ஒத்துப் போவார்கள். எல்லா நாடுகளிலேயேயும் விடுதலை இயக்கம் இருக்கிறது. அதில்போட்டியாக சில விடுதலை இயக்கங்கள் தோன்றுவதுண்டு. அதற்குப் பின்னணியாகப் பல-சக்திகள் இருப்பதும் உண்டு. ஒற்றுமை ஒற்றுமை என்று பேசிக் கொண்டு போராட்டத்தை ஒத்திப் போடுவது சரியல்ல. யார் களத்தில் போராடுகிறார்களோ அவர்களுக்கு மற்றவர்கள் உதவவேண்டும். அது தான் முக்கியமானது.

— திலீபன்

# நிகழ்வுகள்

# டிசம்பர் 1986

1. ஊர்காவற்றுறைக்கு அண்மையில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் கடற்படைப்படகு சிதறி மூவர் பலியானார்கள்.

❊ ரயில் பயணிகளை ஏற்றிய வான் மதகுடன் மோதி ஒருவர்பலி, மூவர் காயம்.

2. மட்டக்களப்பு பாலமீன்மடுப் பகுதியில் தேடுதல் நடத்திய அதிரடிப்படையினர் வீட்டுக்குள்ளிருந்த நால்வரை வெளியே இழுத்து வீட்டின் முன் சுட்டுக்கொன்றனர்.

❊ தனி ஈழக் கோரிக்கை இப்போது இல்லை என்று இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் ஜே. என். டிக்ஷித் தெரிவித்தார்.

5. விஜேகுமாரணதுங்கா தலைமையில் பௌத்த பிக்குகள் மற்றும் பலர் யாழ்ப்பாணம் வந்தனர்.

6. மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 27 மணிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஊர்காவற்படையினர் நால்வரும் ஒரு பெண் குழந்தையும் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இ.போ.சபை ஊழியர் பத்துப்பேர் பஸ்ஸிலிருந்து இறக்கிக் காத்தான்குடியில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

7. பல்கலைக்கழக மாணவர் பாதயாத்திரை நிறுத்தப்பட்டது.

10 பரீட்சை எழுதும் மாணவன் உட்பட எழுநூறுபேர் கல்முனையிலும் தம்பிலுவிலும் படையினரால் கைது.

11. வணபிதா சிங்கராயர் பலாலி முகாமில் வந்து தமது தாயாரைச் சந்தித்துத் திரும்பினார்.

13. கல்முனையில் மூன்று முஸ்லிம்கள் படையினரால் சுட்டுக்கொலை. போராளிகள் தாக்கியதில் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிசார் மாண்டனர்.

14. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத் தடைசெய்து விடுதலைப் புலிகள் நடவடிக்கை.

15. தம்பிலுவிலில் அதிரடிப் படையினர் சுட்டு, புல்லுவெட்டிக் கொண்டு வந்த மூவர் பலி.

❊ தாயகம் பிரிக்கப்படுவதை ஏற்க முடியாதென்று இந்திய இணை அமைச்சர் குழுவிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் தெரிவித்தது.

17. திருக்கோயில் பகுதியில் இரு போராளிக் குழுக்கள் மோதிய போது ஆயுதப்படை சுற்றி வளைத்தது. போராளிகள் காடுகளுக்குள் தப்பிக்கொண்டனர்.

21. திரு. நடேசன் கியூ.ஸி. தமது 83வது வயதில் காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடந்த கைதிகள் பரிமாற்றம்



அடம்பன் மோதலில் விடுதலைப் புலிகளால் சிறை பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் விடுவிப்பதற்கு புலிகள் விதித்த நிபந்தனையை ஏற்ற அரச பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காவலில் வைத்திருந்த இரு விடுதலைப் புலிகளையும் விடுதலை செய்தது. பலாலி விமான நிலையத்திலிருந்து வந்த இருவரையும் விடுதலைப் புலிகள் இயக்க யாழ். குடாநாடடுத் தளபதி திரு. கிட்டுவும் மற்றையோரும் அழைத்து வந்தபோது எடுத்த படம்.



கைதிகள் பரிமாற்றத்தில் பெரும்பங்கு கொண்ட காப்டன் கொத்தலாவலே.



இரண்டு மாதங்களுக்கு மேல் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த இரண்டு சிப்பாய்களும் விடுதலை பெற்று மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறார்கள்.



விடுதலை பெற்ற செல்வக்குமார் தனது தந்தையுடனும் சகோதரியுடனும் காணப்படுகிறார்.

"செந்திக்கதிர்" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 1-1-87 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437.
கௌரவ நிர்வாக ஆசிரியர்: [illegible] பிரசுரிப்பாளர்: சிவ. சோமசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org